# ஆள்கடத்தல்

## தொழிலாளர்களுக்கான தகவல் குறிப்பு

### ஆள்கடத்தல் என்றால் என்ன?

ஆள்கடத்தல் என்பது சுரண்டல் நோக்கங்களுக்காக ஏமாற்ற வழிகள், பயமுறுத்துதல் அல்லது கட்டாயப்படுத்துதல் மூலம் மக்களை உடல்ரீதியாக எல்லைகளைக் கடந்து கொண்டு செல்லுதல்.

உலகெங்கிலும், எல்லாப் பின்னணிகளிலிருந்து வரும் ஆண்கள், பெண்கள் மற்றும் பிள்ளைகள் பலதரப்பட்ட தொழில்களுக்காகக் கடத்தப்படுகிறார்கள். அவற்றுள் பின்வருவனவும் உள்ளடங்கும்:

- விவசாயம்
- கட்டுமானத் தொழில்
- வீட்டுவேலை
- விருந்தோம்பல்
- பாலியல் தொழில், மற்றும்
- தொழிற்சாலை வேலை

**எந்த வகையிலுமான ஆள்கடத்தலும் ஆஸ்திரேலியாவில் குற்றச் செயலாகும்.**

### ஒருவர் கடத்தப்பட்டு இருக்கக்கூடும் என்பதற்கான அறிகுறிகள்

உடன் வேலை செய்யும் தொழிலாளி ஆள்கடத்தலினால் பாதிக்கப்பட்டவரா என்பதை அறிந்துகொள்ளப் பின்வரும் அறிகுறிகளை உணர்ந்து இருக்கவும்:

- அந்த நபர் தன்னை வேலைக்கு அமர்த்தியவரிடமோ அல்லது மூன்றாம் தரப்பினரிடமோ (ஆள்சேர்ப்புச் சேவை போன்றவை) ஒரு கடன்தொகையை அடைக்கச் சேவை செய்வதுபோல் தோன்றுதல்
- அந்த நபர் தனது வேலையை எந்த நேரத்திலும் நிறுத்த முடியாதிருத்தல்
- கடவுச்சீட்டுகள் அல்லது நிரந்தரவாசி என்பதற்கான ஆவணங்கள் போன்ற ஒருவரது சொந்த ஆவணங்களை வேலைக்கு அமர்த்தியவரோ அல்லது மூன்றாம் தரப்பினரோ வைத்திருத்தல் என்பதோடு அந்த ஊழியர் அவர்கள் விரும்பும் நேரத்தில் இந்த ஆவணங்களை அணுகிப் பெற அனுமதியில்லாதிருத்தல்
- அந்தத் தொழிலாளர் வேலை தொடர்பாக வன்முறைக்கு உள்ளாகி இருக்கிறார் அல்லது பயமுறுத்தப்பட்டு இருக்கிறார் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.
- அந்த நபர் வேலையிடத்தில் கட்டுப்படுத்தப்பட்டோ அல்லது தனித்துவிடப்பட்டோ இருக்கிறார் அல்லது வேலையிடத்தைவிட்டு நேரங்கெட்ட வேளையில் வெளியே செல்கிறார்.
- அந்த நபர் வேலையிடத்திலேயே வசிக்கிறார், அல்லது வேலைக்கு அமர்த்தப்பட்டவரால் சொந்தமான/கட்டுப்படுத்தப்பட்ட வேறோர் இடத்தில் வசிக்கிறார்
- அந்த நபர் வெளிநாட்டிலிருந்து வந்தவர் என்பதால் மற்ற ஊழியர்கள் போலில்லாமல் வேறுபட்ட அல்லது குறைந்தளவு சாதகமான வேலைச் சூழல்களுக்கு உள்ளாகியிருக்கிறார்
- அந்த நபர் அடுத்தவரது கட்டுப்பாட்டில் இருப்பதோடு தனக்காக பேசுவதற்கு அனுமதி இல்லாதிருத்தல்
- அந்த நபர் தமது பணத்தை வைத்துக்கொள்ளவும் முதலீடு செய்யவும் அந்த நபருக்கு இடையீட்டாளர் ஒருவர் இருக்கிறார்.
- அந்த நபருக்குத் தமது வேலையின் விதிமுறைகளும் நிபந்தனைகளும் புரியவில்லை.

# ஆள்கடத்தல்

# தொழிலாளர்களுக்கான தகவல் குறிப்பு

## ஆள்கடத்தல் பற்றிய சட்டங்கள்

- Criminal Code Act 1995 (Cth) (குற்றவியல் சட்டத்தொகுப்பு)-இன் கீழ் ஆள்கடத்தல், அடிமைத்தனம், கடனுக்காக அடிமைப்படுத்துதல் போன்றவை குற்றச்செயல்களாகும்.
- ஒருவரை வேலையில் அமர்த்துவதோ ஈடுபடுத்துவதோ, அல்லது ஒருவரை வேலைக்குப் பரிந்துரை செய்வதோ Migration Act 1958 (Cth) (புலம்பெயர்ந்தோருக்கான சட்டம்)-இன் கீழ் இடம்பெறும் நுழைவனுமதி (விசா) வரையறைகளை மீறுவதாகும்.
- வேலையில் அமர்த்துபவர்கள் ஆஸ்திரேலியாவின் வேலையிடத்துச் சட்டங்களுக்கு இணங்கி நடக்கவேண்டும். ஆஸ்திரேலியாவில் வேலை பார்க்கும் அனைவரும், வெளிநாட்டு ஊழியர்கள் (ஆஸ்திரேலியாவின் குடியுரிமையற்றவர்கள் அல்லது நிரந்தரவாசிகள் உள்பட), வேலையிடத்தில் அடிப்படை உரிமைகளுக்கும் பாதுகாப்புகளுக்கும் தகுதியுடையவர்கள். ஆஸ்திரேலியாவின் வேலையிடத்துச் சட்டங்கள்பற்றிக் கூடுதலான தகவல் நியாயமான வேலைக்கான முறைகேள் அமைப்பின் (ஓம்பட்ஸ்மனின்) (Fair Work Ombudsman) இணையத்தளத்தில் (www.fwo.gov.au) கிடைக்கும். வெளிநாட்டு ஊழியர்களை வேலையில் ஈடுபடுத்தும் வேலைக்கு அமர்த்துவர்கள் ஆஸ்திரேலியாவின் வேலையிடத்துச் சட்டங்கள் மற்றும் குடிநுழைவுச் சட்டங்கள் ஆகிய இரண்டிற்கும் இணங்கி நடப்பதை உறுதிப்படுததிக் கொள்ளவும்.
- வேலைக்கு அமர்த்துவோர் தாம் வேலைக்கு அமர்த்தக்கூடிய ஊழியர்கள் ஆஸ்திரேலியாவில் வேலை செய்யத் தகுதியுடையவர்களா என்பதைக் குடிவரவு மற்றும் குடியுரிமைத் துறையினரிடம் (Department of Immigration and Citizenship) சரிபார்த்துக் கொள்ளலாம். பின்வரும் இணையமுகவரியில் http://www.immi.gov.au/e_visa/vevo.htm கணினிவழி நேரடித் தொடர்புகொண்டு இந்தச் சரிபார்த்தலைப் செய்யலாம்.
- ஆஸ்திரேலியாவில் ஆள்கடத்தல்தொடர்பான சட்டங்கள்பற்றிய கூடுதலான தகவல் பின்வரும் இணையத்தளத்தில் www.ag.gov.au கிடைக்கும்.

## ஒருவர் கடத்தப்பட்டிருக்கிறார் என்று நீங்கள் சந்தேகப்பட்டால், நீங்கள் என்ன செய்யவேண்டும்?

அப்படி ஒருவர் கடத்தப்பட்டுள்ளார் என்பது உங்களுக்குத் தெரிந்திருந்தாலோ, அல்லது சந்தேகப்பட்டாலோ, அதை 1800 813 784 என்னும் எண்ணில் தொடர்புகொண்டு ஆஸ்திரேலியா மத்திய காவல்துறையினரிடம் புகார் செய்யவும்.

அப்படி ஒருவர் சுரண்டல்தனமான வேலைசெய்யும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் என்பது தெரிந்திருந்தால், அதை 13 13 94 என்னும் எண்ணில் தொடர்புகொண்டு நீங்கள் நியாய வேலைக்கான ஓம்பட்ஸ்மனிடம் புகார் செய்யவும்.

அவசரகால நிலைமையில், 000 என்னும் எண்ணில் தொடர்புகொள்ளவும்.